*Paper presented at the Research Sessions 2002, Faculty of Graduate Studies*
*University of Jaffna, Thirunelvely, Sri Lanka, 25-26 Jan 2003*

# சீனாவின் ஆழ்கடல் அதிகாரக் கொள்கை - இந்து சமுத்திரப் பிராந்தியம் பற்றிய ஓர் ஆய்வு.

**K.T.Ganeshalingam**
**Lecturer, Department of Political Science & Sociology, University of Jaffna**

**சுருக்கம்**

ஆசியக் கண்டத்தில் பிரதான அதிகார அரசுகளாக மக்கள் சீனக் குடியரசும், இந்தியக் குடியரசும் காணப்பட்டபோதும் ஐக்கிய அமெரிக்காவின் செல்வாக்கும் கணிசமான பங்கைப் பெற்றுள்ளதனை அவதானிக்க முடிகின்றது. கடந்த இரண்டு நூற்றாண்டுகளாக பல்வேறுபட்ட குடியேற்றவாத அரசு களும், வல்லரசுகளும் ஆசியாவைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கான போராட்டத்தில் இந்து சமுத்திரப் பிராந்தியம் முக்கிய தளமாக அமைந்திருந்தது. இந்து சமுத்திரத்தினைக் கட்டுப்படுத்தும் நிலை எழுச்சியடையும் போதே ஆசியாவைக் கட்டுப்படுத்த முடியுமென்ற நிலை ஏற்பட்டிருந்தது.

இரண்டாம் உலக யுத்தம்வரையும் ஐக்கியஇராட்சியத்தினால் வெற்றிகரமாகத் தக்கவைத்திருந்த ஆசியாவும் - இந்துசமுத்திரப் பிராந்தியமும் போருக்குப் பிந்திய இருதுருவ அரசியல் போட்டியில் ஐக்கிய அமெரிக்காவும், சோவியத் யூனியனுக்கும் உரியதாக மாறியது. ஆனால் பனிப்போர் காலம் முழுவதும் இரு வல்லரசுகளின் அதிகாரப் போட்டிக்கான சூழல் இந்து சமுத்திரப் பிராந்தியத்தினையும் அதிகாரச் சமநிலைக்குள் உட்படுத்தியிருந்தது. சோவியத் யூனியனின் வீழ்ச்சி சர்வதேச அரசியல் சமநிலையில் மாற்றத்தை ஏற்படுத்தியது போன்று இந்து சமுத்திரப் பிராந்தியத்திலும் மாற்றத்தை ஏற்படுத்தியது. ஐக்கிய அமெரிக்காவின் விஸ்தரிப்புவாதம் உலகம் முழுவதும் பரவும் நிலை கடந்த ஒரு தசாப்தத்திற்கும் மேலான காலப்பகுதியில் நிகழ்ந்து வருவதனாலும், வேறும் பல பிராந்தியங்களில் அமெரிக்காவிற்கு எதிராக எழுந்துள்ள போராட்டங்களாலும் சர்வதேச அரசியலில் போட்டித் தன்மை, தனிவல்லரசு நிலையினால் குறைந்துள்ளதும் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் ஐக்கிய அமெரிக்காவின் கவனம் கடந்த பனிப்போர் காலத்தைவிட மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் இந்தியா, சீனாப் பிராந்தியத்தில் எழுச்சியடைகின்றபோதிலும் சீனா இப் பிராந்திய அரசுகளுடன் ஏற்படுத்திக் கொள்ளும் அரசியல் - பொருளாதார - இராணுவ உறவினாலும் இந்து சமுத்திரப் பிராந்தியத்திலுள்ள சில இராணுவத் தளங்களையும் சீனாவுக்குரியதாக மாற்றிக் கொள்ளும் போக்கும் அதன் விஸ்தரிப்புக் கொள்கையை தெளிவாகக் காட்டுகின்றது.

## 1. அறிமுகம் (Introduction)

ஆசியக் கண்டத்தில் வலுத்தன்மை பொருந்திய அரசுகளில் சீனாவும் ஒன்றாகும். பிராந்திய, சர்வதேச வல்லரசுகளுக்கான போட்டியில் அரசியல், பொருளாதார, இராணுவ பலத்தில் குறிப்பிடத்தக்க சக்தியாக எழுச்சியடைந்து கொண்டிருக்கும் அரசாகவும் சீனா விளங்குகின்றது. இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் ஆதிக்கம் ஆசியாவைத் தக்க வைக்கவும் அதன் வழியாக ஏனைய பிராந்தியங்களை நோக்கி அதிகாரங்களை விஸ்தரிக்கவும் அவசியமானதாக அமைகின்றது. இதனால் மிக நீண்ட காலமாக இந்து சமுத்திரப் பிராந்தியம் சர்வதேச வல்லருசுகளது ஆதிக்கத்துக்குள் மாறி மாறி அகப்பட்டிருந்தது. இதன் பரிமாணத்தில் இந்தியாவும் சீனாவும் இந்து சமுத்திரத்தினை தமது செல்வாக்குப் பகுதியாக மாற்றுவதில் அண்மைக் காலமாக அதிக கவனத்தினைக் கொண்டிருப்பதும் அமெரிக்காவின் ஊடுருவலை இப் பிராந்தியத்தில் சீனா எதிர் கொள்ளவும் இத்தகைய விஸ்தரிப்பு அவசியமாகின்றது.

சீனா பரந்த நிலப்பரப்பையும் (3,705, 386 Squer miles ) உலகில் அதிக சனத்தொகையையும் (1.2 Billion) தன்னகத்தே கொண்ட மக்கள் சீனக் குடியரசாக[1] விளங்குகின்றது. கம்யூனிஸ் அரசியல் சித்தாந்தத்தினைப் பின்பற்றும் அரசியல் மாதிரியைப் உள்ளடக்கிய அரசாக ஆசியாவிலேயே ஸ்திர மான வளர்ச்சியைக் கொண்ட நாடாக விளங்குகின்றது. 1949 ம் ஆண்டு நிகழ்ந்த மாவோ - சேதுங் தலைமையிலான சீனப் புரட்சியும் டொங் - ஷியாவோ - பிங் காலத்தில் நிகழ்ந்த பொருளாதார மறுசீரமைப்பும் சந்தைப் பொருளாதாரத்திற்கு வாய்ப்பளித்த புரட்சிகளாக அமைந்தன. இது சீனாவின் தொடர்ச்சியான அரசியல், பொருளாதார உறுதிப்பாட்டுக்கு வழிவகுத்தது. இம் மறுசீரமைப்பின் பிரதிபலிப்பாக ஏற்பட்ட அமெரிக்க-சீன உறவினால் விவசாயம், கைத்தொழில், விஞ்ஞானம், பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் பாரிய சீர்திருத்தங்களை சீனா மேற்கொண்டு வெற்றியடைந்தது. அதனால் ஆயுதத் தளபாடங்களிலும் இராணுவத் தொழில்நுட்பத்திலும் விருத்தி பெற்றதுடன் கடற்படை, விமானப்படை பிரிவுகளை துரிதமாக நவீனப்படுத்தியது.[2]

பனிப்போர் முடிந்த பின் உருவாகிய புதிய உலக ஒழுங்கில் (New World Order) சீன – அமெரிக்க நெருக்கம் படிப்படியாக விரிசலடையத் தொடங்கியதுடன் பொருளாதாரப்போக்கில் சீனா அமெரிக்கா வுடன் புரிந்துணர்வுடைய உறவினைப் பேணி வருகின்றது. இன்னோர் வகையில் கூறுவதாயின் அரசியல் மட்டத்தில் முறுகலும் பொருளாதார மட்டத்தில் நெருக்கமும் இரு நாடுகளிற்குமிடையில் நிலவுகின்றது. ஆனால் இராணுவச் சமநிலையில் அமெரிக்கா சர்வதேச மட்டத்தில் முன்னணியில் காணப்பட்டாலும் கிழக்காசியாவில் சீனாவின் இராணுவ வலுவே மேலோங்கியுள்ளது. 2001 ஏப்பிரல் காலப்பகுதியில் அமெரிக்காவின் கடற்படை உளவு விமானமான EP – 3 சீனா கரையோரப் பிரதேசமாகிய Hainan இல் தரை இறக்கப்பட்ட விவகாரம் சீன இராணுவ பலத்தை அதன் பிராந்தியத்தில் கோடிட்டுக் காட்டப் போதுமானது[3] ஆனால் அதன் பின்னர் ஆப்கானிஸ்தான் பிரதேசத்தில் மூண்ட போர் அமெரிக்காவின் பிரசன்னத்தை மத்திய ஆசியாவின் நிர்ணயத்துடன் சீனாவின் தரையூடான மேற்காசியத் தொடர்பையும் அதன் அரசியல் - இராணுவ – பொருளாதார – பரிமாற்றத்தையும் அமெரிக்கத் தலைமையிலான இராணுவ நடவடிக்கை கட்டுப்படுத்துவதாக அமைகின்றது. மேலும் .அமெரிக்கா மத்திய ஆசிய குடியரசுகள் பக்கமும் கிழக்கு ஐரோப்பா பக்கமும் நேட்டோவை விஸ்தரிக்கும் நோக்குடன் செயல்படுவதும் அது தனித்து இராணுவ விஸ்தரிப்புக் கொள்கை மட்டு மல்லாது அரசியல் பொருளாதார அடிப்படையிலான விஸ்தரிப்புக் கொள்கையாகவே பரிமாணமடைந்து வருவதும் குறிப்பிடத்தக்கதாகும். அதனால் பசுபிக் கடல் பிரதேசம் முழுவதும் அமெரிக்காவினதும் அதன் செல்வாக்கு அரசுகளினதும் (ஜப்பான், தென்கொரியா) கண்காணிப்புக்கும் தலையீடிற்கும் உள்ளாகி வருகிறநிலை காணப்படுகின்றது தைவானைப் பயன்படுத்தி சீனாவை நெருக்கடிக்குள் சிக்கவைக்க அமெரிக்கா முயற்சி எடுக்கும்போது சீனா தைவானை, ஹொங் ஹொங் மற்றும் மக்கோப் பிரதேசங்களை ஆட்சிப்படுத்துவது போன்று கையாளும் கொள்கையைக் கொண்டுள்ளது.

## 2. மூலத்தரவுகள் (Primary Sources)

இவ்வாய்வுக்கான மூலத்தரவுகள் சீனாவின் உத்தியோகபூர்வமான உடன்படிக்கைகள், உறவுகள் மற்றும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றது. மேலும் இந்து சமுத்திர பிராந்தியத்தை மையப்படுத்த வெளிவந்த தகவல்களையும் உள்ளடக்கியிருப்பதுடன் இந்தியாவும் மேற்கு நாடுகளும் சீனா தொடர்பாக கொள்ளும் அச்சத்துக்கான ஆதாரங்களையும் கொண்டு இவ் வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

## 3. ஆய்வு முறைமை (Research Methods)

சீனாவின் கடலாதிக்க கொள்கையைப் பற்றிய ஆய்வானது விபரண ஆய்வாக அமைந் துள்ளது. அதிலும் சில விசேடமான தகவல்களை முதன்மைப்படுத்தி புதிய விடயங்களை புதிய கோணத்தில் கண்டறிகின்ற நோக்கத்தில் ஆராயப்படுகின்றது. இந்து சமுத்திர பிராந்தியமென்பது இந்தியாவுக்கோ, அமெரிக்காவுக்கோ என்று மட்டுமிருந்த நிலைமாறி, சீனாவுக்குரியதாகவும் உள்ளதென்பதை சீனாவின் அணுகுமுறையை இனங்கண்டு முழுமைப்படுத்த இவ்வாய்வு முயலுகின்றது. இதனால் சீனா முழு உலகத்திலும் ஏற்படுத்த உள்ள மாற்றங்களை முன்கூட்டியே உணர்ந்து கொள்ள உதவுமெனவும் கருதுவதுடன் இனிவரும் இது போன்ற ஆய்வுகளுக்கு முன்னோடியாக அமையுமெனவும் உணர்த் தப்படுகின்றது.

## 4. கலந்துரையாடல் (Discussions) புதிய கடலாதிக்க கொள்கை

பொருளாதார அடிப்படையில் இரட்டை இலக்கத்தில் வளர்ச்சியடையும் சீனா கிழக்காசியப் பிராந்தியத்தினை கடந்து உலகளாவிய பொருளாதார சக்தியாக எழுச்சியடைந்து வருகின்றது. ஒரு பக்கம் அமெரிக்காவின் போட்டித்தன்மை மறு பக்கம் யூரோலாந்தின் எழுச்சி எதிர்கால சீனாவின் பொருளாதாரத்தை பாதித்து விடுமா? என்ற முன்கூட்டிய திட்டமிடல் சீனாவின் கடல் ஆதிக்க விஸ்தரிப்புக் கொள்கைக்குள் மறைந்துள்ள அம்சமாகும். 2002 ம் ஆண்டு நிகழ்ந்த கம்யூனிசக் கட்சியின் 16வது மகாநாட்டில் பொருளாதார மீள்மறுசீரமைப்பிற்கும் (Re – Reform) அதற்கு ஏற்ற மாதிரியான அரசியல் தீர்மானங்களையும் வெளிநாட்டுக் கொள்கை வகுப்புக்களையும் மேற் கொள்ளத்திட்டமிட்டு இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் சீனக்கம்யூனிசக் கட்சியின் வரலாற்றில் முதன் முதலாக "Maritime Rights and Intest" என்ற விடயம் அதன் கொள்கை வகுப்பில் முதன்மைப்படுத்த ஆரம்பித்துள்ளது. கடல் பிராந்தியங்களை உரிமை கூறுவதும் புதிய சமுத்திரங்கள்

மீதான தன்னாதிக்க நலனை வேண்டி நிற்பதும் அதன் புதிய சிந்தனையாக அமைகின்றது. அதன் அடிப்படையில் *சீனா*வின் புதிய இலக்காக பின்வரும் விடயங்களை இனங்காணலாம்.

- ➢ புதிய தேசிய பாதுகாப்புக் கொள்கை ஒன்றை உருவாக்குதல்
- ➢ வெளிநாடுகளுடனான உறவில் நெருக்கத்தைப் பேணுதல்
- ➢ *சீனா*வின் இறைமைக்கும் தன்னாதிக்கத்திற்கும் முன்னுரிமை அளித்தல்
- ➢ தேசிய பாதுகாப்பிற்கும் ஒருமைப்பாட்டுக்கும் ஏற்ப கடல் பிரதேச உரிமைகளையும் நலன் களையும் பராமரித்தல்[4]

என்ற அடிப்படையில் அமைந்திருக்கின்றது. இதிலிருந்து தெளிவாக புலப்படும் விடயம் கடல் பிரதேசங்களை நோக்கிய விஸ்தரிப்பில் *சீனா* ஈடுபடத்தொடங்கி விட்டது என்பதாகும். அது *சீனா*வின் பொருளாதார வளர்ச்சி மட்டுமல்லாது உலகளாவிய அதிகாரத்திற்கான போட்டியை நோக்கியதாக அமைவது தவிர்க்க முடியாததாக அமையும். ஜகார்ட்டா சர்வதேச கற்கைநிலைய ஆய்வாளர் Jusf Wanadi மற்றும் சர்வதேச பொருளாதார கற்கை அலகின் ஆய்வாளர் George Yeo ஆகியோர் கூறுவது போன்று அடுத்து வரும் 30 – 50 ஆண்டுகளிற்கிடையில் *சீனா* பெரும் வல்லரசாக எழுச்சியடையும் நிலை காணப்படுகின்றது என்பது இங்கு கவனிக்கத்தக்கதாகும். எனவே இந்து சமுத்திரம் பிராந்தியத்தில் *சீனா* மேற்குறிப்பிட்ட நலனைப் பூர்த்தி செய்வதற்கான வலுவான அடிப்படையாக அமையும் என்பது நிராகரிக்க முடியாத கருத்தாகும். மேலும் பொருளாதார அரசியல் விஸ்தரிப்பினை தென்னாசியா, மேற்காசியா, ஆபிரிக்காவின் கிழக்கு நாடுகளுடன் நட்பையும் நெருக்கமான உறவுகளையும் உருவாக்கி வருகின்றது[5]. அது மட்டுமன்றி இந்தியாவின் இந்துசமுத்திரப் பிராந்தியத்தின் செல்வாக்கை முறியடிப்பதன் வாயிலாக அல்லது சமநிலையைப் பேணுவதன் வாயிலாக *சீனா*வின் பிராந்தியத்தினை கடந்த அரசியல் செல்வாக்கை நிலைநாட்ட முடியும் என்பதை காட்டுகின்ற நடவடிக்கையாகவும் இது அமைந்துள்ளது.

எனவே இந்து சமுத்திரப் பிராந்தியத்தை நோக்கி *சீனா* தனது விஸ்தரிப்பு வாதத்தினை உருவாக்கக் காரணமான அமைந்தவற்றை கோடிட்டுக் காட்டியது போன்று இந்து சமுத்திரத்தில் *சீனா*வின் விஸ்தரிப்பு எந்த அடிப்படையில் ஏற்பட்டுள்ளது என்பதை நோக்குவோம். அதனை பிரதான இரண்டு தலைப்புகளில் அவதானிக்க முடியும்.

1. இந்து சமுத்திர கடல் பிரதேத்தினுள் *சீனா* தனது விரிவாக்கத்தை ஏற்படுத்தி வருவது.

2. இந்து சமுத்திர விழிம்பு நாடுகளுடனான *சீனா*வின் உறவுகளினால் அவ்விஸ்தரிப்பை அடைய முயலுகின்றமை.

**இந்து சமுத்திர கடல் பிரதேசத்தினுள் *சீனா* தனது விரிவாக்கத்தை ஏற்படுத்தி வருவது**

மக்கள் *சீனக்*குடியரசு இந்து சமுத்திரக் கடல் பிரதேசத்தினுள் நேரடியாக பிரவேசிப்பதற்கான அணுகுமுறைகளையும் கொள்கை வகுப்புக்களையும் 2001 ஆம் ஆண்டிற்கு பின்னர் மிகத்தீவிரமாகக் கையாளத் தொடங்கியுள்ளது. இந்து சமுத்திரத்தின் வங்காள விரிகுடாப்பகுதியிலும், அந்தமான் தீவை அண்டிய கடல் பகுதியிலும் மத்திய இந்திய தட்டை உள்ளடக்கிய கடல் பிரதேசத்திலும் *சீனா*வின் நேரடி விஸ்தரிப்பு நிகழ்ந்து வருகின்றது. சில சந்தர்ப்பங்களில் கரையோரப் பகுதிகளையும் துறைமுகங்களையும் விஸ்தரிப்புக் கொள்கைக்குள் உள்ளடக்கியுள்ளது.

1) மாலைதீவின் தலைநகரமாகிய மாலியிலிருந்து 40Km தென்பகுதியிலே அமைந்துள்ள (Marao) மாரோ தீவில் இராணுவ – கடற்படைத்தளம் ஒன்றை நிறுவிவருகின்றது. மாலைதீவு அரசாங்கம் *சீனா*வுடன் செய்து கொண்ட உடன்படிக்கையின் பின்னர் இத்தீவில் Dong Feng - 44 ஏவுகணை களையும் மற்றும் Ballistic ஏவுகணைகள் போன்றவைகளை [6] *சீன* மக்கள் விடுதலை இராணுவ – கடற்படை (PLAN) பிரிவுகள் கூட்டாக நிறுவி வருகின்றன.

   Marao தீவை *சீனா* தனது செல்வாக்கிற்குள் கொண்டு வந்தமையால் Blue - Water என்று கருதப்படும் ஆழக்கடற்பரப்பில் *சீனக்* கடற்படையின் பலம் விருத்தி அடையத் தொடங்கியுள்ளது. இந்து சமுத்திரக் கடற்பரப்பில் *சீனா*வின் பாரிய கடற்படையின் வளர்ச்சிக்கான வாய்ப்புக்களை எதிர்காலத்தில் உருவாக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. 2000 ஆம் ஆண்டு *சீனா*வின் பாது காப்புக்கொள்கையின் வெள்ளை அறிக்கையில் Marao தீவைப் பற்றி அதிக தகவல்கள் திட்டமிடலாக வெளியாகி இருந்தது. குறிப்பாக மரோ தீவின் 2010ம் ஆண்டிற்கிடையில் தாக்கும் திறன் கொண்ட கடற்படைப் பிரிவொன்றை நிறுவுவதென *சீன*அரசு திட்டமிட்டுள்ளது. அத்துடன்

போர் திறனுடைய அதே வேளைதிரும்பத்தாக்கும் கடற்படைப்பிரிவினை கொண்ட இரண்டு விமானம் தாங்கிக் கப்பல்களை விருத்தி செய்வதெனவும் ஐந்து நீர்மூழ்கிக் கப்பல்களை உருவாக்கி பாவனை விடுவதெனவும் அவ்வெள்ளை அறிக்கையில் திட்டமிடப்பட்டிருந்தது. அத்தகைய கடற்படை பிரிவுக்கு உதவும் வகையில் விமானப்படைபிரிவை நிறுவுவதெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.[7] இது சீனாவின் இந்து சமுத்திரம் நோக்கிய அதிகாரப் போட்டியை சாதகமாக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

2) இந்து சமுத்திரத்தின் வடதென் மத்தியின் நுழைவாயிலாக விளங்கும் Malacca நீரோடைப்பகுதி சீனாவின் செல்வாக்குக்குள் வந்துள்ளது. உலகில் மிகவும் பலமானதும், தந்திரோபாயமான பரிசோதனை மையமாகவும் விளங்கும் மலாக்கா நீரோடை மலேசியாவுக்கும் இந்தோனேசியாவின் தீவுகளில் ஒன்றான சுமாத்திராவுக்கும் இடைப்பட்ட பகுதியில் அமைந்துள்ளது. இவ் ஒடுங்கிய நீரோடையினை *சீனா* தக்கவைத்திருப்பது இந்து சமுத்திரப் பகுதிக்குள் *சீனாவின்* இராணுவ – கடற்படை அலை ஏற்பட வாய்ப்பினை அதிகரிக்கும்[8] இது இந்து சமுத்திரப் பிராந்தியத்தினையும் கடந்த நிலையில் உள்ள சமுத்திரப் பகுதிகளுடனான தந்திரோபாய மையமாகவும் விளங்கக் கூடியது. இராணுவ விரிவாக்க மையமாக மட்டுமல்லாது மலாக்கா தூரகிழக்காசிய நாடுகளுக்கும், ஐரோப்பாவுக்குமான வியாபார நிலையமாகவும், மேற்காசியா இந்தியாவுடனான அவற்றின் வர்த்தகத்திற்கான அனுமதி மையமாகவும் யதார்த்தத்தில் திகழக்கூடியதாக உள்ளது. இப்பகுதியில் நிலவும் ஆயுத மோதல்களுக்கும், பிராந்திய அதிகாரப் போட்டிகளுக்கும் சவால் விடும் அமெரிக்க மேலாதிக்கத்திற்கும் எதிராக *சீனாவின்* கை ஓங்கும் வாய்ப்புக்கள் அதிகம் காணப்படுகின்றது.

3) மாலைதீவுக் கடற்பரப்பையும், மியான்மாரின் கடற்பகுதியிலிருந்து 180 மைல் தூரத்தில் அமைந்துள்ள CoCos தீவு *சீனாவின்* முழுமையான இராணுவ – கடற்படை பிரதேசமாக விஸ்தரிப்படையும் நிலையிலுள்ள[9] போக்கு அதன் மிகப்பிரதான பலமாக உள்ளது. இத்தீவு இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் வாணிப மையமாகவும், தகவல் பரிமாற்றத்துக்கான நிலையமாகவும் வளர்ச்சியடைய வாய்ப்பு அதிகமுண்டு. மலாக்கா நீரோடையிலிருந்து 400 மைல் தூரத்தில் அமைந்திருந்த போதும் இரு பிரதேசங்களையும் தகவல் பரிமாற்றத்தின் மூலம் *சீனா* இணைக்கும் பலத்தைப் பெற்றுள்ளது. இதனால் *சீனாவின்* வலைப் பின்னலுக்குள் அமைந்திருக்கும் மிகப் பலமான தீவாக கொகோஸ் விளங்குகின்றது.

4) அவ்வாறே Zadelkyi, அந்தமான் கடற்பரப்பையும் மியான்மாரையும் அண்டிய பகுதியில் அமைந்துள்ளதனால் *சீனாவின்* இராணுவ – கடற்படை நிலைகளை இணைத்துக் கொள்வதிலும் பாதுகாப்பை தக்கவைப்பதிலும் சாதகமான வழிமுறைகளைக் கொண்டுள்ளது. இப்பகுதியில் *சீனா* தனது கடற்படை - இராணுவ தளங்களை நிறுவுவதுடன் ராடர் நிலையம் ஒன்றையும் அமைத்தும் வருகின்றது. இத்தீவில் *சீனாவின்* கடற்படையின் ரோந்து பிரிவும் தாக்குதல் படைப்பிரிவும் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. இதே போன்று *சீனாவின்* தென்கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள ஆநசபரன 1995 களின் பிற்பகுதியில் *சீன* கடற்படையின் செல்வாக்குகள் வந்துள்ளது. இக் கரையோர பகுதியிலும் பாதுகாப்பு நிலைகளைப் பலப்படுத்தும் வேலைகளில் *சீனா* ஈடுபட்டு வருவதுடன் மலாக்கா நீரோடைக்கு அண்டிய பகுதி[10] என்பதனால் அதிக முக்கியத்துவம் வாய்ந்த தீவாக விளங்குகின்றது.

5) மியான்மாரின் கரையோரப் பிரதேசத்தில் அமைந்துள்ள Sittwe[11] பகுதியில் *சீனாவின்* கடற்படைதளம் ஒன்று 2000 ஆம் ஆண்டிலிருந்து மிக வேகமாக வளர்ச்சி பெற்று வருகின்றது. *சீன* அரசாங்கம் மியான்மாரின் தலைநகரமான ரங்கூனிலிருந்து தரைப்பாதை ஊடாக தொடர்புகளைப் பேணுவதற்கான வீதி அமைப்பை உருவாக்குவதற்கு நிதி உதவிகளை வழங்கி வருவதுடன் இப்படைத் தளத்துக்கான இராணுவ – ஆயுத தளபாடங்கள் அனைத்தையும் தரையூடாகவே மாற்றி வருகின்றது குறிப்பிடத்தக்கது. இது ஏற்கனவே இனங்காணப்பட்ட தீவுகளுடன் தொடர்புகளை அமைத்திருப்பதும் *சீனக்* கடற்படை மியான்மார் கடையோரத்தினை கண்காணிக்க உதவியாகவும் அமைகின்றது. மியான்மாரின் Manaung, Haiggyi பிரதேசங்களில் இராணுவத்தளங்களும் அதன் விரிவாக்கமும் *சீனாவின்* செல்வாக்குப் பகுதியாக வந்துள்ளமை குறிப்பிடத்தக்க நிகழ்வாகும். இவை மியான்மாரின் நிலப்பரப்பாக அமைந்த போதும் சீனாவுடன் மியான்மார் கொண்டுள்ள நெருக்கமான உறவுகள் நிமித்தம் பல உடன்படிக்கைகளை இரு அரசுகளும் வரைந்துள்ளதாக தெரிய வருகின்றது.

## 5. இந்து சமுத்திர விழிம்பு நாடுகளுடனான சீனாவின் உறவு

### a) இந்தோனேசியாவுடன்

பனிப்போர் நிகழ்ந்து கொண்டிருந்த காலப்பகுதி முழுவதும் இப்பிராந்திய நாடுகளை சோசலிஸ அலைக்குள் மூழ்கிவிடாது பாதுகாக்கும் நோக்கத்துடன் அமெரிக்காவும் அதன் வலது சாரி அணிநாடு களும் செயல்பட்டிருந்தன. அதில் இந்தோனேசியாவும் மேற்கு நாடுகளின் உதவிகளை பெற்று பொருளாதாரத்தில் வளர்ச்சியை நோக்கி நகர்ந்தது. பனிப்போர் முடிந்த புதிய உலக ஒழுங்கில் மேற்கின் பொருளாதார உதவி மட்டுப்படுத்தப்பட்டதுடன் அரசியல் - இராணுவரீதியான தலையீடுகள் அதிகரிக்கத் தொடங்கியது. இந்தோனேசியாவின் தீவான கிழக்குத்தீமோர் அமெரிக்காவின் செல்வாக்குமிக்கதாக மாறியதுடன் இறைமையுடைய தனி அரசாக அங்கீகரிக்கப்பட்டது. இவ் அங்கீகாரத்திற்கும் தென்கிழக்காசிய, கிழக்காசிய பிராந்திய மீதான மேற்கின் கொள்கைக்கும் தொடர்பு கள் அதிகமாக உள்ளது.

மறுபக்கத்தில் அமெரிக்கா தலைமையிலான நேட்டோவின் தலையீடு யூகோசிலாவியா பிராந்தியத்தில் அதிகரித்துள்ளதுடன் 12 ஆயிரம் நேட்டோ துருப்புக்கள் இப்பிராந்தியத்தில் குவிக்கப்பட்டுள்ளன. இதனால் சீனா, ரஷ்சியா என்பன பிராந்திய அதிகாரச் சமநிலையை தக்க வைக்க முடியாத சூழல் ஏற்பட்டுவிடும் என்ற அச்ச உணர்வுப் பிரதிபலித்தமையால் இந்தோனேசியாவுடனான நெருக்கத்தை அதிகம் விரும்புகின்றன. பரஸ்பரம் இந்தோனேசியாவும், சீனாவும் அமெரிக்காவின் பெருகிவரும் ஆதிக்கத்தினால் தமது நெருக்கத்தை அதிகம் ஏற்படுத்திக் கொள்ள விரும்புகின்றன. இந்தோனேசி யாவின் ஜனாதிபதி சீனாவுக்கு அரச முறை விஜயம் ஒன்றை மேற்கொண்டபோது சீனாவுடன் இராணுவ ஆயுத தளபாட வர்த்தகம் தொடர்பான உடன்பாட்டை அடைந்ததுடன் பிரதான தளபாடங்களுக்கான கொள்வனவு கூட்டு நாடாக சீனாவையும், ரஷ்சியாவையும் இந்தோனேசியா கொண்டுள்ளது. மேலும் மியான்மார் இந்தோனேசியாவின் மிக நெருங்கிய நட்பு நாடாக சீனாவினால் அறிமுகப்படுத்தப்பட்டு கையாளப்பட்டு வருகின்றது. எனவே இந்து சமுத்திரத்தின் வடகிழக்கு மத்தியில் அமைந்துள்ள இந்தோனேசியாவுடனான நெருக்கம் சீனாவின் இந்து சமுத்திரப் பிராந்தியம் மீதான செல்வாக்கை பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது.

### b) மிகப்பெரும் கூட்டாளியாக மியான்மார்

மியான்மாரின் இராணுவ ஆட்சியுடன் சீனா கொண்டிருக்கும் நெருக்கம் பலபரிமாணங்களை உள்ளடக்கியது. குறிப்பாக இந்துசமுத்திர நாடுகளுடனான வர்த்தகத்திற்கான மைய நிலமாக விளங்குவதுடன் Yunnan and Sichuan ஆகிய மாகாணங்கள் சீனாவின் தொடர்புகளையும், பரிமாற்றங்களையும் இலகுவாக்கும் தன்மை கொண்ட Interland ஆக திகழுகின்றன. மேலும் தென்ஆசியாவுக்கும், தென்கிழக்காசியாவுக்குமான இராணுவ, பொருளாதாரத் தொடர்பை ஏற்படுத்தும் புதிய வர்த்தக பாதைக்கான பிரதேசமாகவும் உள்ளது. அத்துடன் இந்தியாவின் இராணுவ–கடற்படை நடமாட்டத்தை கண்காணிப்பதுடன் வங்களாவிரிகுடாவுக்கூடாக அந்தமான் கடற்பகுதியையும் நேரடியாக பார்வையிடவும் நகர்வுகளை சாத்தியப்படுத்தவும் உதவுகின்றது.

மியான்மாருக்கு அதிக பொருளாதார உதவியை வழங்கும் நாடுகளின் பட்டியலில் சீனா முதலாவது நாடாக விளங்குகின்றது.[13] ஒவ்வொரு ஆண்டும் ஏறக்குறைய 750 million அ.டொ.கான வர்த்தகத்தினை சீனா – மியான்மாருடன் கொண்டுள்ளது.[14] இவற்றைவிட இராணுவ ஒத்திகைகள் கடற்படை ரோந்து நடவடிக்கைகள் என பல அம்சங்களில் சீனாவும் மியான்மாரும் கூட்டாக ஈடுபட்டு வருகின்றன.

### c) மாலைதீவுடனான உறவு

மாலைதீவு இந்தியாவுடன் நெருக்கமான உறவை பேணி வந்த நிலை 2001 க்கு பின்பு பாரிய மாற் றத்தினை அடைந்துள்ளது. இந்தியாவின் விஸ்தரிப்புக் கொள்கையால் பல தடவை பாதிக்கப்பட்ட மாலைதீவு சீனாவுடன் நெருக்கமான இராணுவ – பொருளாதார உறவுகளை அப்துல் ஹொயூம் அரசாங்கம் ஏற்படுத்தி வருகின்றது. பல கடற்படை தளங்களை அமைப்பதற்கான ஒப்புதலை மாலைதீவு – சீனாவுடன் உடன்பட்டமை தொடர்பாக இக்கட்டுரை முன்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### d) இலங்கை உடனான உறவு

சீனா இலங்கையுடன் தந்திரோபாயமான உறவை மிக நீண்ட காலமாக பேணி வருகின்றது. இராணுவ உதவி மற்றும் ஆயுத தளபாட வர்த்தகம், பொருளாதார வர்த்தக உறவு என்ற அடிப்படையில் இந்நெருக்கம் வளர்ந்து வந்தாலும் வங்காள விரிகுடாவை அண்மித்த இந்து சமுத்திர மைய நாடு என்ற வகையிலும் இதன் முக்கியத்துவம் தனித்துவமானதாக விளங்குகின்றது. இலங்கை இராணுவத்திற்கான கனரக ஆயுதங்களின் வழங்கல் நாடாக சீனா விளங்குகின்றது[15] குறிப்பிடத்தக்க தாகும். மிக அண்மையில் இலங்கை அரசாங்கம் கடல் வலய ஒப்பந்தம் ஒன்றில் சீனாவுடன் கைச்சாத்திட்டிருப்பதும் அதன் கடலாதிக்கக் கொள்கையின் விரிவாக்கத்தை தெளிவுபடுத்துகின்றது.

### e) ஈரான் - சீன உறவு

சீனா ஈரானுடன் பல உடன்படிக்கையில் ஒப்பமிட்டுள்ளது. அணுவாயுத தொழில்நுட்பத்தை ஈரானுக்கு வழங்குவதற்கான இரகசிய உடன்படிக்கை ஒன்றில் சீனா 2001 இல் ஈரானுடன் ஒப்பமிட்டுள்ளது.[16] மேலும் அரிசி – எண்ணை உடன்படிக்கை மற்றும் வர்த்தகப் பொருள்கள் பரிமாற்றம் தொடர்பான நடவடிக்கைகள் என பலவற்றில் இருநாடுகளும் அதிக நட்பினைப் பேணி வருகின்றன. ஈராக்குடன் நேரடியான தொடர்புகளை வைத்திருக்காத போதும் அதிக – விரிசல் இல்லாத நிலைமை காணப்பட்டாலும் ஈரானுடன் அடிப்படை உறவுகளை வளைகுடா பிரதேசத்தில் வைத்துக் கொள்ள சீனா விரும்புகிறது. இதனால் அமெரிக்க நலனுக்கு எதிராக ஈரானை பாதுகாக்க நேரடியாக உதவக்கூடியதாக அமையும்.

### f) பாகிஸ்தான் - சீன நெருக்கம்

சீனா இந்தியாவுடன் சமமான நெருக்கத்தினை கொண்டிருந்த போதும் பாகிஸ்தானுடன் கொண்டிருக்கும் நெருக்கம் இந்து சமுத்திர விழிம்பு நாடுகளுடனான அதிக தொடர்பையும் சீனாவின் நலனையும் பாதுகாப்பதற்கான ராஜதந்திர ரீதியான உறவாகவும் அமைந்துள்ளது. பாகிஸ்தானின் இராணுவ வளர்ச்சிக்கு அடிப்படை வலுவை அளிக்கும் நாடாக சீனா காணப்படுவதனாலும் பாகிஸ்தானின் அணுவாயுதப் பரிசோதனைகளுக்கும் எறி ஏவுகணை (ballistic) அபிவிருத்திக்கும் சீனாவின் ஒத்துழைப்பே அடிப்படையாகும்.[17] சீனாவின் புவியியல் ரீதியான (Xinjiang Uygur) தொடர்பும் அரசியல், பொருளாதார ரீதியான உறவுக்கு ஆதாரமாக அமைந்திருக்கின்றது.

### g) தென்னாபிரிக்காவுடனான உறவு

1998 ஆம் ஆண்டு பின்பான காலப்பகுதியில் சீனா தென்னாபிரிக்காவுடனான நெருக்கம் விரிவடைந்து வருவதுடன் நெல்சன் மண்டேலாவின் ஆட்சிக் காலத்தில் சீனாவின் சுகாதாரம், வரி, காவல்துறை, பாரிய வர்த்தகம், தேசிய பாதுகாப்பு போன்ற துறைகளின் அனுபவங்களையும் சேவைகளையும் தென்னாபிரிக்கா பரிமாறிக் கொண்டது குறிப்பிடத்தக்கது. தென்னாபிரிக்காவின் மிகப் பெரிய வர்த்தக கூட்டாளியாக சீனா விளங்கிவருகிறது. 1998 ஆம் ஆண்டு மட்டும் 1,558 billion அமெரிக்க டொலர் வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்[18] இரு அரசுகளும் முதலீட்டுத் திட்டங்களிலும், பொருளாதார, வர்த்தக, கூட்டுத் திட்டங்களிலும், வர்த்தக – பொருளாதார தொழில்நுட்ப ஒத்துழைப்புக் களிலும் உடன்பாடு கண்டுள்ளன.

ஆபிரிக்க கண்டத்தில் தென்னாபிரிக்கா போன்று தன்சானியா, கென்யா போன்ற நாடுகளுடனும் சீனா நெருக்கமான இராணுவ பொருளாதார வர்த்தக உறவுகளை ஏற்படுத்தி வருகின்றது. 2000 ஆம் ஆண்டு வர்த்தகப் பெறுமதி தன்சானியாவுடன் 90.553 million அமெரிக்க டொலராகவுள்ளதுடன் சீனாவின் ஏற்றுமதி 85.763 million அ. டொ ஆகவும் இறக்குமதி 4.77 million அ..டொ உள்ளது குறிப்பிடத்தக்கது. இரு நாட்டு அரசாங்கங்களும் 2000 ஆண்டில் Investment & Trade promotion Center (ITPC) உருவாக்கி அதனூடாக வாணிப நடவடிக்கைகளையும் முதலீட்டுத் திட்டங்களையும் மேற்கொண்டு வருகின்றன.[19]

கென்ய – சீன உறவானது மிக நீண்ட பாரம்பரியத்துடன் தொடர்புபட்டதாக விளங்கியபோதும் வர்த்தக உடன்பாடுகளின் நிமித்தமே உறவு முதன்மைப்படுத்தப் படுகின்றது. கிழக்கு ஆபிரிக்க வட்டகையில் சீனாவின் பெரிய வர்த்தக மையமாக கென்யா விளங்குகின்றது.[20]

எனவே சீனா இந்துசமுத்திர விழிம்பு நாடுகளுடன் ஏற்படுத்தி வரும் நெருக்கமான உறவு அதன் கடலாதிக்க அல்லது விஸ்தரிப்புக் கொள்கையை முன்னிறுத்திய உறவாகவே அமைந்துள்ளது. சீனாவின் எதிர்கால இலக்குகளில் ஒன்றான இந்து சமுத்திரப் பிராந்தியத்தை தமது செல்வாக்குக்குள் கொண்டு வருவதற்காக கடலாதிக்க கொள்கையில், சீனா அண்மையில் ஏற்படுத்தியுள்ள மாறுதலையும் அதன் கொள்கை வகுப்புக்களையும் பின்வரும் ஒழுங்கு முறையில் நோக்குவோம்.

I) மரபு வழியான கடற்படை கப்பல்களை மட்டுமே உருவாக்குவதென்று வகுக்கப்பட்ட கொள்கை 2000 ஆண்டுடன் முடிவுக்கு வருகின்றதெனவும் பிராந்திய வலுவை பாதுகாக்கக்கூடிய தாக்குதல் படைப்பிரிவைக் கொண்ட பாரிய கப்பல் படையை நிறுவுவதென தற்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

II) 2001 முதல் 2020 இடையில் 20,000 - 30,000 தொன் எடையுடைய Several light விமானம் தாங்கிக் கப்பல்கள் பலவற்றை தயாரித்தல் சீனாவின்கடற்படை – தரைப்படை ஆகிய பிரிவின் போராடும் திறனை விருத்திசெய்யும் நோக்கில் பல யுத்தக் கப்பல்களையும், படை நகர்த்தும் கப்பல்அணிகளையும் உருவாக்குதல். இது பசுபிக் கடலையோ, இந்து சமுத்திரத்தையோ மட்டும் இலக்கு வைத்ததல்லாமல் முழு உலகத்தையும் கண்காணிக்கும் நோக்கிலான தொழில்நுட்பத்தைக் கொண்டு தயாரிக்கப்படவுள்ளது.

III) 2021 இலிருந்து 2040 இடைப்பட்ட காலப்பகுதிக்குள் அதீத கடரதிகாரத்தை தக்கவைக்கும் நோக்குடன் (blue water) ஆழக்கடல் பகுதிகளை ஆளும் பலத்தைப் பெறுதலாகும்.[21]

## 6. முடிவுரை

சீனாவின் கடலாதிக்க விஸ்தரிப்புக் கொள்கை பற்றிய ஆய்விலிருந்து பல முடிவுகள் வெளிவந்துள்ளன. குறிப்பாக இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் ஆதிக்க சக்தியாக தென்னாசிய அறிஞர்களாலும் மேற்கு நாட்டறிஞர்களாலும் இதுவரை இனங்காணப்பட்ட இந்தியாவுக்கு சவாலாக சீனா எழுச்சியடைந்துள்ளதென்பதாகும். இது இந்தியவை மட்டுமல்ல இந்தியாவுடன் பனிப்போர் முடியும்வரை இணைந்திருந்த முன்னாள் சோவியத்யூனியனின் கூற்றுக்களையும் பனிப்போர் முடிந்த பின்னர் இந்தியாவுடன் நெருங்கிவரும் அமெரிக்காவின் நலன்களையும் பாதிப்பதாக அமையும்.

அடுத்து சீனா ஆழக்கடல் நோக்கி விஸ்தரிப்பை தொடக்கியிருப்பது அதன் புதிய அத்தியாயத்தை காட்டுவதாக அமைந்திருக்கின்றது. அமெரிக்காவும், மேற்கு சக்திகளும் இணைந்து சீனாவை முறியடிக்கத் திட்டமிடும் போது சீனா புதிய பாதைகளை உருவாக்கி தன்னை தக்கவைப்பது மட்டுமன்றி உலகளாவிய ரீதியிலான பாரிய அரசாக வளரவும் முனைகின்றது. இது தொடர்பாக இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்ட பின்னர் வெளிவந்த "China's New Diplomacy" "Evan S.Medeires and M.Taylor Fravel) என்ற ஆய்வும் China Takes off (David Hale and Lyric Hugbes Hale) என்ற ஆய்வும் மேற்குறிப்பிட்ட கருத்தை வலியுறுத்துவதாகவும், ஆதாரப்படுத்த முயல்வதையும் காண முடிகிறது.

எனவே தொகுத்து நோக்குகின்ற போது சீனாவின் கடற்படை எழுச்சி இந்து சமுத்திரத்தினூடாக பாரிய வளர்ச்சியை அடையும். சீனா ஆழக்கடல் பகுதிகளில் தனது கடற்பலத்தை விரிவாக்குவது ஏற்கனவே சவாலை எதிர்கொள்ளும் அமெரிக்க ஆதிக்கத்துக்கு இந்து சமுத்திரத்தில் மட்டுமல்ல பசுபிக்சமுத்திரத்திலும் போட்டியாக திகழும். இதன் வளர்ச்சி அமெரிக்காவுக்கும், ரஷ்சியாவுக்கும் அடுத்த நிலையில் சீனாவின் கடற்படை விளங்கும் என்ற நம்பிக்கை இந்திய அறிஞர்களால் சுட்டிக்காட்டப்படுகின்றது. இது தொடர்பான அச்சம் இந்திய ஆட்சியாளர்களிடம் ஏற்பட்டுவிட்டது என்பது கவனத்துக்குரியதாகும்.

## NOTES

1. William A.Joseph , mark Kesselman , Joel Krieger , Third world Politics At the Grossroads , 1996, D.C Heath and Company Pp :22 – 23


2. Ibid : PP : 62 – 63

3. Sangwon Suh , Peace : Asia week April 20 , 2001 , PP 23 – 26
4. Dr. Harvir Sharma : China's Interests in the Indian Rim Countries and India's Maritime Security , India Quarterly A Journal of International Affairs , Vol. LVII No , 4 , October – December 2001. Indian Council of world Affairs, New Delhi PP : 67
5. Ibid .
6. Ibid . PP: 72
7. Ibid
8. Rand Green : China watch what if china Held and Arms Race and Nobody Else Show up ? February 22 , 2001 . www. Perspicuity online , Com. . 31-12-02
   மலாக்கா நீரோடையின் நீளம் 800முஅ ஆகவும் அதன் அகலம் 500Km ஐயும் கொண்டதாக உள்ளது. அந்தமான், தென்சீன கடற்பிரதேசத்துடன் தொடர்புடைய இப்பகுதி உலகளாவிய கப்பல் போக்குவரத்தில் மிகமுக்கிய நீரோடையாகவும் விளங்குகிறது. இப்பகுதியிலுள்ள மலாக்கா நீரோடை சிங்கப்பூர் மற்றும் பலதீவுகளில் பாரிய துறைமுகமாகவும் அமைந்திருக்கின்றது.
9. Dr. Harvir Sharma, P , 72
   இந்து சமுத்திரத்தில் அமைந்துள்ள இத்தீவில் மிகக் குறைந்த பழங்குடிகள் (595 – 1993 ஆண்டு கணிப்பீடு) வாழ்கின்றனர். ஏறக்குறைய 14 சதுர கி.மீ நீளமும் 5.5 ச.மை அகலமும் உடைய தீவாகவுள்ளது. இத்தீவு இந்து சமுத்திரத்தின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள 27 பவளத்தீவுகளிலும் தனித்துவமான தீவாக உள்ளது. கோகொஸ்ன் முக்கியத்துவத்தை உணர்ந்த கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியின் தளபதி William Keeling அத்தீவுக்கு 1609 இல் விஜயம் செய்ததுடன் அதனை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த நிகழ்வு நினைவுகோரத்தக்கது. ஆனால் இந்நிலை 1826 வரை எந்தவிதமாற்றமும் இன்றி பின்பற்றப்பட்டது. அதில் 19ம் நூற்றாண்டில் பிற்பகுதியில் தீவுகள் அரசாங்கம் ஒன்று நிறுவப்பட்டு பிரித்தானியா இலங்கை, சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலிருந்து பிரித்தானியர் நேரடியாக பராமரித்து வந்தனர். 1955 இருந்து 1984 வரை அவுஸ்திரேலியாவின் பகுதியாக அமைந் திருந்தது. தற்போது சீனாவின் செல்வாக்குக்குள் உட்பட்டுள்ளது.
10. Ibid PP : 75
11. இது மியான்மாரின் கரையோரப் பிரதேசத்தில் அமைந்திருக்கும் சிறிய தீவாகும். பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட மீன்பிடியை பிரதான தொழிலாகக் கொண்ட கிராமிய பண்புடைய மக்கள் வாழ்கின்றனர். இது இப்பிராந்தியத்தில் முக்கியம் வாய்ந்த துறைமுகமாகவும் விளங்குகின்றது. இது தந்திரோபாயமான மையமாக இரண்டாம் உலக யுத்தகாலப் பகுதியில் காணப்பட்டதும், 1942 இல் ஜப்பான் இத்தீவைக் கைப்பற்றியிருந்தமையும் 1945 பிரித்தானியா மீளக்கைப்பற்றியதையும் காணலாம். இது மியான்மாரின் பிராந்தியமாக விளங்கியபோதும் சீனாவின் செல்வாக்குமிக்க இராணுவ – கடற்படைத் தளத்தைக் கொண்ட தீர்வாக தற்போது அமைந்துள்ளது.
12. Ibid .
13. IVO. H. Daalder , NATO in the 21st Century what puopose , what missions ? April 1999. w.w.w. Perspicacity online . Com. 31-12-02
14. Dr. Harvir Shamrma P : 75
15. Ibid
16. India Today April , 2003
17. SIPRI Year book, 1999 , Oxford University Press. P,519
18. M .V. Rappai , China's Nuclear Arsenal and Missile Defence , Studies and Analysis New Delhi, P : 72
19. Dr. Harvir Sharma P : 71
20. Ibid. P : 73
21. Ibid. P : 70





படம் - 1 Sources - World map)

*Paper presented at the Research Sessions 2002, Faculty of Graduate Studies*
*University of Jaffna, Thirunelvely, Sri Lanka, 25-26 Jan 2003*




படம் - 2

*Paper presented at the Research Sessions 2002, Faculty of Graduate Studies University of Jaffna, Thirunelvely, Sri Lanka, 25-26 Jan 2003*




Sources- World map)

படம் - 3